


**MARCH**

**11**

மார்ச் 11

# பனித யுலோஜியுஸ் (818-859)

இவர் கொர்டோவா நகரில் பிறந்தார். அக்காலத்தில் அது ஸ்பெயின் நாட்டில் மகமதியரின் தலைநகரமாக இருந்தது. இவர் குருப்பாட்டம் பெற்றதும் குருத்துவ கல்வி நிலையம் ஒன்றின் தலைவராக நியமிக்கப்பட்டார். செபத்தில் மிகுதியான நேரத்தைச் செலவழித்தார். கடும் தவமுயற்சிகள் செய்வார். அனைவரும் இவரை மதித்தார்கள். மகமதிய அரசர்கள், முதல் நூற்று முப்பது ஆண்டுகளாக கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தவில்லை. எனினும் கிறிஸ்தவர்கள் ஒரு பெருந்தொகையை வரிப்பணமாகக் கட்டவேண்டியிருந்தது. 851-ஆம் ஆண்டில் வேத கலகம் தோன்றியது. கிறிஸ்தவர்களை நம் புனிதர் ஊக்கப்படுத்தி வந்தார். மகமதிய பெண் ஒருத்தி கிறிஸ்தவளானாள். அவளை நம் புனிதர் ஆதரித்துப் பேசினார். அதற்காக அவரைப் பிடித்துக் கொன்றார்கள். அவரோ மகமதிய மதத்தின் தப்பறைகளை எடுத்துக் காட்டி தம் நடுவனை மனந்திருப்ப முயன்றார்.

**சிந்தனை:**

விசுவாசத்தில் இறுதிவரை உறுதியாக இருக்கிறவர்களுக்காக காத்திருக்கும் சன்மானத்தை நீ அறிவாயானால் அந்த சன்மானத்திற்காக உலக செல்வங்கள் அனைத்தையும் துறந்துவிடுவாய். (புனித யுலோஜிஸ்)

**செபம்:**

ஆண்டவரே, உம்முடைய பரிசுத்த ஆவியை அனுப்பி மனந்தளர்ந்திருக்கும் கிறிஸ்தவர்களை திடப்படுத்தும்.